<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

நாள் 03.02.2026

அசல் வழக்கு எண். 298/2011

வா.சா.1 – சுந்தரமூர்த்தி, த/பெ. தானப்ப நாயக்கர்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

உங்கள் சகோதரர் சங்கர் மற்றொரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் அந்த விவரங்களை உங்களுக்கு உங்கள் வழக்கறிஞர் படித்து காட்டினாரா என்றால் படித்துக் காட்டினார். உங்கள் அப்பா பெயரில் உள்ள கிரயம் பத்திரம் நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நத்தம் இடமாகும். பத்திரம் தாக்கல் செய்யவில்லை. உங்கள் அப்பா உயிருடன் இருந்த பொழுது அவருடன் சேர்ந்து நீங்களும் உங்கள் சகோதரரும் பாகப்பிரிவினை செய்து கொண்டீர்கள் என்றால் சரிதான். உங்கள் அப்பாவுக்கு எந்த சர்வே நம்பரில் பாகம் வந்தது என்றால் தெரியாது. நீங்கள் தாக்கல் செய்த பட்டா ஆவணம் ஒன்று மற்றும் இரண்டு அடிப்படையில் தான் பாகப்பிரிவினை செய்து கொண்டீர்கள் என்றால் சரிதான். உங்கள் அப்பா பெயரில் எந்த ஆண்டு பட்டா வழங்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. பாகப்பிரிவினையில் எந்த ஷெட்யூல் உங்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. தம்பி சங்கருக்கு எந்த ஷெட்யூல் ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்கள் 278/13, 278/14, 278/15, 278/16 ஆகியவை கூட்டு வரைபடம் தாலுக்கா அலுவலகத்தில் வாங்கி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரத்தில் பட்டாவை இணைக்கவில்லை என்றால் சரியில்லை இணைத்துள்ளேன். பட்டாவை இணைக்கவில்லை என்றால்

சரிதான் சர்வேயரை கொண்டு அளந்தீர்களா என்றால் அளக்கவில்லை. பிரதிவாதி அளக்க வரும் பொழுது நீங்கள் வழக்கறிஞர் வைத்து அளக்கக்கூடாது என்று ஆட்சேபனை தெரிவித்தீர்கள் என்றால் சரிதான். ஆகவே பிரதிவாதி எஸ் பி அவர்களிடம் புகார் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார். அது பொய் புகார் அந்த விசாரணையில் நீங்கள் சென்று ஆஜரானீர்கள் என்றால் சரிதான். அளந்தால் உங்கள் சொத்து இல்லை என்பது தெரிந்து விடும் என்பதால் வேண்டுமென்று ஆட்சேபனை செய்து தடுத்தீர்கள் என்றால் சரியில்லை. போலீசார் உங்கள் மீது வழக்கு போட்டு விடுவார்கள் என்று பயந்து கொண்டு அதிலிருந்து தப்பிப்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் சரியில்லை. வழக்கறிஞர் அறிவிப்பு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்பொழுது தாலுக்கா சர்வேயர் வைத்து அளப்பதற்கு உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் எனக்கு ஆட்சேபனை இல்லை அளந்தால் உண்மை தெரிந்து விடும் என்றால் சரிதான். எதிர்வாதி உங்களுக்கு எதிராக எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் அதனை படித்துப் பார்த்தீர்களா என்றால் படித்துப் பார்க்கவில்லை. அந்த பதிலை ஆட்சேபித்து எந்த பதிலும் போடவில்லை என்றால் சரியில்லை அவ்வாறு நீங்கள் போடவில்லை வழக்கிற்காக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. உங்கள் கிராமத்தில் எவ்வளவு வீடு உள்ளது என்றால் சுமார் 300 வீடு இருக்கும். ஒவ்வொரு வீட்டிற்கும் தனித்தனியாக கதவு எண்

**உள்ளது என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்த ரசீதில் கதவு எண் இல்லை என்றால் சரிதான்.**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram